<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.</u>

2018 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 09ம் நாள் செவ்வாய்க் கிழமை1873ம் ஆண்டு 10ஆவது ஏற்பாட்டின்படி திரு. பி.பாலாஜி, இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

அசல் வழக்கு எண். 311/2017 (பழைய எண்.326/2004) என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. அய்யாவு | வயது | .. |
| த/பெ. | .. | சாதி | .. |
| கிராமம் | .. | சமயம் | .. |
| தாலுக்கா | .. | தொழில் | .. |

09.10.2018 வா.சா.1 முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி. நான் எனது முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். படித்துப் பார்த்து தான் கையெழுத்து போட்டேன். தாவா 1வது அயிட்ட சொத்திற்கு 1395 பசலிக்கு பட்டா எண்.317க்கான சிட்டா வா.சா.ஆ.1. தாவா 1வது அயிட்ட சொத்திற்கு 1413 பசலிக்கு வழங்கப்பட்டுள்ள அடங்கல் பதிவேட்டு நகல் வா.சா.ஆ.2. தாவா 2வது அயிட்ட சொத்திற்கு பட்டா எண்.372க்கு வழங்கப்பட்டுள்ள கணிணி சிட்டா வா.சா.ஆ.3. தாவா 2வது அயிட்ட சொத்திற்கு 1413 பசலிக்கு வழங்கப்பட்டுள்ள அடங்கல் பதிவேட்டு நகல் வா.சா.ஆ.4. 13.3.1966 தேதியில் என்னுடைய தாத்தா தாவா 2வது அயிட்ட சொத்தை கிரையம் பெற்றதற்கான கிரையப் பத்திரம் சான்றிட்ட பதிவு நகல் வா.சா.ஆ.5. மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஓம்/வே. ஜெகன்னாதன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
போளூர்.